# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1998, யூன் மாதம் 12 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சான்று (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 41/96

## சான்றுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

14 ஆம் அத்தியாயத்தில் 35அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

2. பின்வரும் பிரிவானது, 35 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 35அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அத்தகைய கூற்றில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றித் தனிப்பட்ட ரீதியிலான அறிவைக் கொண்டிருக்கும் மூன்றாம் திறத்தவர்களினால் வழங்கப்படும் தகவலின்மீது தொகுக்கப்படும் பதிவேடுகளில் அடங்கியுள்ள கூற்றுக்கள் எப்போது இயைபானவை ஆகும் என்பது.

35அ. (அ) எம்முயற்சியில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது செய்தொழிலில் ஆளெவரும் ஈடுபட்டுள்ளாரோ அல்லது வேலைக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அம்முயற்சியில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது செய்தொழிலில் அவர் ஈடுபட்டிருக்கும்போது அவரினால் அல்லது அத்தகைய ஆளினால் வகிக்கப்படும், ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும் அல்லது கொடுப்பனவு செய்யப்படாத பதவியின் நோக்கங்களுக்காக அத்தகைய ஆளினால் ; அத்துடன்

(ஆ) அத்தகவலில் கையாளப்படும் விடயங்கள் பற்றி தனிப்பட்ட ரீதியிலான அறிவைக் கொண்டிருந்த அல்லது அறிவைக் கொண்டிருந்தார் என நியாயமான அளவு கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எவரேனும் ஆளினால், அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட தகவலிலிருந்து,

2-டீ- 047378 - 1,600 (98/03)

தொகுக்கப்படும் பதிவேடொன்றில் அடங்கியுள்ள நிகழ்வொன்று பற்றிய கூற்றானது, இயைபான நிகழ்வொன்றாதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஒரு கூற்றானது, எத்தகவலிலிருந்து அக்கூற்றைக் கொண்டிருக்கும் பதிவேடு தொகுக்கப்பட்டதோ அத்தகவலை முதல் முதலாக வழங்கிய ஆளினது வாய்மொழி மூலச் சான்றை ஒப்புறுதிப்படுத்தும் ஆற்றல் கொண்டதாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 41அ, 41ஆ மற்றும் 41இ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

3. பின்வரும் பிரிவுகள், 41 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 41அ, 41ஆ அத்துடன் 41இ என்னும் பிரிவுகளாகப் பயன்பெறுதலும் வேண்டும்.

"குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பளிப்புகளைப் பதிவு செய்யும் தீர்ப்புகள் முதலியனவற்றின் இயைபாந் தன்மை.

41அ. (1) அவதூறுக்கான வழக்கொன்றில், குற்றவியல் தவறொன்றை ஆளெவரும் புரிந்தாரா என்ற வினாவானது, ஆய்நிகழ்வொன்றாக இருக்கின்றவிடத்து, (எத்தீர்ப்பொன்றுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படற்பாலதான காலப் பகுதிக்குள் மேன்முறையீடு எதுவும் செய்யப்படவில்லையோ அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டதன் மேல் இறுதியான உறுதிசெய்யப்பட்டதோ அத்தீர்ப்பொன்றாக இருக்கின்றதான) அக்குற்றவியல் தவறுக்காக அவ்வாளின் குற்றத் தீர்ப்பளிப்பைப் பதிவுசெய்கின்ற இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றானது, அத்தகைய தவறை அத்தகைய ஆள் புரிந்தார் என எண்பிக்கும் நோக்கத்துக்காக இயைபானதாதல் வேண்டும் என்பதுடன் அது அந்நிகழ்வு பற்றிய முடிவான எண்பிப்பாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமில்லாமல், எவையேனும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் ஆளெவரும், அத்தகைய குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய ஆள் திறத்தவர் ஒருவராக இருந்தாலென்ன அல்லது இல்லாவிட்டாலென்ன, ஏதேனும் தவறுக்காக இலங்கையில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறார் அல்லது தவறொன்றாக அமைகின்ற செயல்களைப் புரிந்திருக்கிறார் என்ற வினாவானது ஆய் நிகழ்வொன்றாக இருக்கின்றவிடத்து, (எத்தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படற்பாலதான காலப்பகுதிக்குள் மேன்முறையீடு எதுவும் செய்யப்படவில்லையோ அல்லது மேன்முறையீட்டில் இறுதியாக உறுதிசெய்யப்பட்டதோ அத்தீர்ப்பொன்றாக அல்லது கட்டளையொன்றாக இருக்கின்றதான) அத்தகைய தவறுக்காக அத்தகைய ஆளின் குற்றத்தீர்ப்பளிப்பொன்றைப் பதிவுசெய்கின்ற அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றானது அல்லது கட்டளையொன்றானது, அத்தகைய ஆள் அத்தகைய தவறைப் புரிந்தார் அல்லது அத்தகைய தவறாக அமைகின்ற செயல்களைப் புரிந்தார் என்பதை எண்பிக்கும் நோக்கங்களுக்காக, இயைபானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவில்—

"இராணுவ நீதிமன்றம்" என்பது, தரைப்படைச் சட்டத்தின்கீழ் அல்லது கடற்படைச் சட்டத்தின்கீழ் அல்லது வான்படைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் எனப் பொருள்படும். அத்துடன் இராணுவ நீதிமன்றம் ஒன்று தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, "குற்றத் தீர்ப்பளிப்பு" என்னும் சொல்லமைப்பானது, அத்தகைய இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டதும் அத்தகைய இராணுவ நீதிமன்றம் எச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டதோ அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உறுதிசெய்யப்பட்டதுமான குற்றத் தீர்ப்பளிப்பு எனப் பொருள்படும்.

குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் சோரம் போதல் பற்றிய காணல்களைப் பதிவுசெய்யும் தீர்ப்பு முதலியனவற்றின் இயைபாந் தன்மை.

41ஆ. (1) எவையேனும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் ஆளெவரும், அத்தகைய ஆள் அத்தகைய குடியியல் வழக்கு நடவடிக்கையில் திறத்தவர் ஒருவராக இருந்தாலென்ன அல்லது இல்லாவிட்டாலென்ன சோரம்போதலைப் புரிந்துள்ளாரா என்ற வினாவானது ஆய்நிகழ்வொன்றாக இருக்கின்றவிடத்து, (எத்தீர்வையொன்றிலிருந்து, தீர்ப்பொன்றிலிருந்து அல்லது கட்டளையொன்றிலிருந்து மேன்முறையீடு செய்யப்படற்பாலதான காலப்பகுதிக்குள் மேன்முறையீடு எதுவும் செய்யப்படவில்லையோ அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டதன்மேல் உறுதிசெய்யப்பட்டதோ அத்தீர்வையொன்றாக, தீர்ப்பொன்றாக அல்லது கட்டளையொன்றாக இருக்கின்றதான) அச் சோரம்போதலுக்கு அத்தகைய ஆள் குற்றவாளியெனக் காணப்பட்டிருக்கிறார் என்ற காணலொன்றைப் பதிவுசெய்கின்ற எவையேனும் திருமணஞ்சார் வழக்கு நடவடிக்கைகளில் வழங்கப்படும் ஏதேனும் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை அத்தகைய ஆள் அத்தகைய சோரம்போதலைப் புரிந்தார் என்பதை எண்பிப்பதற்கு இயைபான தாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "திருமணஞ்சார் வழக்கு நடவடிக்கைகள்" என்பது, மணத்தளை தணத்தலுக்கான வழக்கு ஒன்று அல்லது உணவுறக்கப் பிரிவொன்றுக்கான வழக்கொன்று அல்லது கண்டிய திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் மாவட்டப் பதிவாளருக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைத் தொடர்ந்து அத்தகைய பதிவாளருக்குமுன் உள்ள வழக்கு நடவடிக்கையொன்று அல்லது முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின்கீழ் மணநீக்கத்துக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைத் தொடர்ந்து காதியொருவருக்கு முன் அல்லது விசேட காதி ஒருவருக்கு முன் உள்ள வழக்கு நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

### எடுத்துக்காட்டுகள்

(அ) "ஏ" என்பவரிடம் "பி" தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும்போது "ஏ" என்பவரின் காரை "பி" ஓட்டிச் செல்லும் வேளையில் "சி" யைக் காயப்படுத்துகிறார்.

கவனமில்லாமல் வாகனம் ஓட்டியதற்காக "பி" குற்றத் தீர்ப்பளிக்கப்படுகிறார்.

"ஏ"க்கும் "பி" க்கும் எதிராக "சி" யினால் சேதாடுகளுக்காகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் "பி"க்கு வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பளிப்பானது, இயைபானது.

(ஆ) "பி" என்பவர் "சி"யுடன் சோரம்போனார் என்ற ஏதுவின்மீது "பி" க்கு எதிராக மணநீக்கத்திற்கான தீர்வையொன்றை "ஏ" என்பவர் பெறுகின்றார்.

"சி"யினுடைய மனைவி, "பி"யுடன் "சி" சோரம்போனவர் என்ற ஏதுவின்மீது, "சி"க்கு எதிராக மணநீக்க வழக்குத் தொடுக்கிறார். இந்த மணநீக்கத் தீர்வை, "பி" என்பவர் "சி"யுடன் சோரம்போனார் என்பதை எண்பிப்பதற்கு இயைபானதாகும்.

*குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் தந்தைமை பற்றிய காணல்களைப் பதிவுசெய்யும் தீர்ப்புகள் முதலியவற்றின் இயைபாந்தன்மை.*

41இ. (1) எவையேனும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளில், ஆளெவரும், அத்தகைய ஆள், அத்தகைய குடியியல் வழக்கு நடவடிக்கைக்குத் திறத்தவர் ஒருவராக இருந்தாலென்ன அல்லது இல்லாவிட்டாலென்ன பிள்ளையொன்றின் தந்தையாக இருக்கிறார் என்பது ஆய்நிகழ்வொன்றாக இருக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பிள்ளையின் தந்தை என்ற காணலைப் பதிவுசெய்கின்ற ஏதேனும் தாபரிப்பு வழக்கு நடவடிக்கைகளில் பதியப்பட்ட கட்டளையொன்று எக்கட்டளையில் இருந்து (மேன்முறையீடு செய்யப்படற்பாலதான காலப்பகுதிக்குள் மேன்முறையீடு எதுவும் செய்யப்படவில்லையோ அல்லது மேன்முறையீட்டில் இறுதியாக உறுதி செய்யப்பட்டதோ அக்கட்டளையொன்றாக இருக்கின்ற) அத்தகைய ஆள் அத்தகைய பிள்ளைக்குத் தந்தை என்பதை எண்பிக்கும் நோக்கங்களுக்காக இயைபானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "தாபரிப்பு நடவடிக்கைகள்" என்பது தாபரிப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றுக்காக நீதிவானொருவருக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி அத்தகைய நீதிவான் முன்னிலையிலிருந்த நடவடிக்கைகள் அல்லது முஸ்லிம் விவாக, மணநீக்கச் சட்டத்தின்கீழ் பிள்ளையொன்றினால் அல்லது ஒரு பிள்ளையின் சார்பில் காதியொருவருக்குச் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையொன்றைப் பின்பற்றி அத்தகைய காதி முன்னிலையிலிருந்த நடவடிக்கைகள் என்று பொருள்படும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, "பிரிவு 41" என்னும் சொல்லும் இலக்கமும் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அல்லது அதன் ஓரக்குறிப்பில் அவற்றிற்குப் பதிலாக, "பிரிவுகள் 41, 41அ, 41ஆ அத்துடன் 41இ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, "பிரிவுகள் 40, 41 அத்துடன் 42" என்னும் சொற்களும் இலக்கங்களும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அல்லது அதன் ஓரக்குறிப்பில் அவற்றிற்குப் பதிலாக "பிரிவுகள் 40, 41, 41அ, 41ஆ, 41இ அத்துடன் 42" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு "பிரிவு 40, 41 அல்லது 42" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "பிரிவுகள் 40, 41, 41அ, 41ஆ, 41இ அல்லது 42" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.